Registered No. M. 801

"உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

THE . . .

AGRICULTURIST

A Monthly Journal devoted to
Agriculture and its allied Subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப்பத்திரிகை

Vol. 1 } சௌமிய௵ புரட்டாசி௴ 1௳ { Part. 6
புத்தகம். 1 } 1909௵ செப்டம்பர்௴ 16௳ { பிரதி. 6

Contents

Cholam in Black Cotton soils 81
Cattle 85
Seed selection in Kar Paddy. 88
Correspondence 89
The South Indian Industrial conference 90
The month's operations ... 92
News and Notes 94
The uses of Improved Ploughs By M. R. Ry. Rao Bahadur J. Dharmaranga Raju Garu 96

பொருளடக்கம்

கரிசல் நிலங்களில் சோளச் சாகுபடி ... 81
கால்நடைகள் ... 85
கார்நெல் தினுசுகளில் விதை பொறுக்கல் ... 88
கடிதம் 89
தென்னிந்தியா கைத்தொழில்விர்த்தி சம்பந்தமான கூட்டம் ... 90
புரட்டாசிமாதப் பருவங்கள் 92
சமாசாரக் குறிப்புகள் ... 94
இரும்புக்கலப்பையின் உபயோகம் ம-ள-ள-ஸ்ரீ ராவ் பஹதூர் ஜே. தர்மரங்க ராஜா அவர்கள் ... 96

வருஷசந்தா தபால்கூலி உள்பட அணா 12
Annual Subscription including Postage As. 12 only

Edited and Published by
J. R. RANGA RAJU,
5, Mount Road, Madras

[*All Rights reserved*]

WORLD RENOWNED SINGERS SEWING MACHINES.

விவசாயக்காரர்களுக்கு முக்கிய அறிவிப்பு

வயல்களில் வேலையற்றிருக்கும்போது காலத்தை வீணாகக்கழிக்கவேண்டாம். உலகப்பிரசித்தியுள்ள எங்கள் தையல்மெஷின்களை வாங்கி காலத்தை நன்றாய்ப்போக்குங்கள். இலாபமுண்டு. மாதம்மாதம் கொஞ்சபணம் கட்டி வாங்கலாம். ரொம்ப சுலபம். மிகவும் உறுதியானது. நீடித்துநிற்கும். உபயோகிக்கும்விதம் கற்றுக்கொடுக்கிறோம். பழுதில்லாமல் பார்த்துக் கொள்ளுகிறோம். சகல சாமான், ஊசி, நூல், எப்போதும் தயாராயிருக்கும். விலை ஜாபிதாவுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சிங்கர் மானிபாக்சரிங் கம்பெனி

பிரதான ஆபீஸ்:—179, மவுண்ரோட் சென்னை. கிளையாபீஸ்கள்:— பெங்களூர், கோயமுத்தூர், குண்ணூர், கடலூர், கடப்பை, ஹிந்துபூர், கடேர், மதிராஸ்டவுன், மதுரை, மடிகரை, மைசூர், இராபர்ட்சன்பேட்டை, சேலம், ஹிமுகா, திருநெல்வேலி, திருவனந்தபுரம், வேலூர் முதலியன.

கிருஷிகன்

மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப்பத்திரிகை. இப்பத்திரிகையானது விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமுமுள்ளவர்களால் எழுதப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து நமது தேசத்து விவசாயம் விருத்தியடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் காகிதக்கிரயமும் அச்சுக்கூலியும் தபால் சிலவும் மாத்திரம் கிடைக்கும்படிக்கான குறைந்த சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு வருஷமும் சித்திரைமீ முதல் ஆரம்பமாகிறது. கடந்த சஞ்சிகைக் கூடுமானவரையில் சப்ளை செய்யப்படும்.

சந்தா விபரம்	ரூ.	அ.	பை.
இந்தியா, பர்மா, சிலோனுக்கு மாத்திரம் தபாற்கூலி உள்பட வருஷம் ஒன்றுக்கு	0	12	0
தனிப்பிரதி	0	2	0

மற்ற அயல்தேசங்களுக்கு தபால்கூலி மாத்திரம் பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்க ராஜு அண்டு பிரதர்ஸ்

5. மௌண்ட்ரோட், சென்னை.

என்று எழுதி வி. பி. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம்.

THE AGRICULTURIST

A monthly Journal devoted to agriculture and its allied subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

Vol. 1 / புத்தகம் 1	சௌமிய௵ புரட்டாசி௴ 1௳ / 1909௵ செப்டம்பர்௴ 16௳	No. 6 / பிரதி 6

நோட்டீஸ்

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியிலும் தவறாமல் நமது பத்திரிகை யனுப்பப்படுகிறபடியால், "கிருஷிகன்" சந்தாதார்களில் எவராவது தமிழ் மாதம் ஐந்தாம் தேதிக்குள் பத்திரிகை பெறாவிட்டால், பத்திரிகை பிரசுரமாகிவிட்டதோ இல்லையோ என்னும் சந்தேகமடையாமல் உடனே கிருஷிகன் மானேஜருக்கு பத்திரிகை சேராதவிஷயம் தெரிவித்தால், அந்தந்த தபாலதிகாரிகளுக்கு எழுதி விசாரிக்கும்படி செய்வதுடன் வேறு பத்திரிகையு மனுப்பப்படும்.

கரிசல் நிலங்களில் சோள்ச்சாகுபடி

CHOLUM IN BLACK COTTON SOILS.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கரிசல் நிலங்களில் பொதுவாய்ச் சோளத்தை தானியத்துக்காகத் தற்காலத்தில் பயிரிடுவதில்லை. கிணற்றிறவையால் தோட்டக்கால் நிலங்களில் சோளம் சாகுபடி செய்வதுண்டு. வெள்ளைச் சோளம், மஞ்சள் சோளம், சிவப்புச் சோளம் என்னும் மூன்று தினுசுகளையும் இவ்விதமாகத் தோட்டக்கால் நிலங்களில் பயிரிடுவதுண்டு. சில இடங்களில் குளங்களிலிருந்து தண்ணீர்பாய்ச்சியும் நன்செய்,புன்செய்நிலங்களில் சோளம் பயிரிடுகிறார்கள். ஆனால் பருத்திக் கரிசல் நிலங்களில் புன்செய்ப் பயிராகச் சோளம் சாதாரணமாகச் சாகுபடி செய்யப்படுவதில்லை. இந்தப் பிராந்தியங்களிலுள்ள ஜனங்களுக்கு முக்கியமான ஆகார தானியம் கம்பு; ஆகையால் அந்தத் தானியத்தையே அதிகமாகக்

கரிசல் நிலங்களில் பயிரிடுகிறார்களென்று நாம் நினைக்க வேண்டியதா யிருக்கிறது. சென்றநூறு வருஷங்களாகக் கம்புப் பயிரைத்தவிர வேறு ஒன்றும் பயிர்செய்யப்படாத நிலங்கள் எவ்வளவோ இருக் கின்றன. ஊரடியிலிருக்கும் கரிசல் நிலங்களி லெல்லாம் இப் படியே செய்கிறார்கள். அவைகளுக்கு சரியானபடி குப்பை எரு போடுகிறார்கள். சங்கிலி ஒன்று (3-64 ஏக்கர்) க்கு 150-வண்டி வரையிலும் கூடப்போடுகிறார்கள். இந்த ஜில்லாவிலுள்ள கரிசல் நிலங்களில் பொதுவாக ஒரு வருஷத்தில் கம்பு அல்லது நாற்றுச்சோளம் அல்லது கடலை அல்லதுகொத்தமல்லியும், மறுவரு ஷத்தில் பருத்தியும் சாகுபடி செய்கிறார்கள். இப்படிசெய்யும் பயிர் மாற்றலில்கூட நாற்றுச்சோளம் சாகுபடி செய்கிறார்களேயல்லா மல் தானியச்சோளம் பயிரிடுவதில்லை. இறவை நிலங்களில் சரியான படி எருவிட்டு வெள்ளைச்சோளம் சாகுபடி செய்யும்போது ஏக்கர் ஒன்றுக்கு தானியம் 560 பக்காமுதல் 785 பக்காவரையிலும் கிடைக் கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், ஒட்டைப்பிடாரம், நாங்குநேரித் தாலுகாக்களில் கரிசல் நிலங்க களில் வரகு, குதிரைவாலி, தினை, புன்செய்க் கேழ்வரகு முதலியவை களைப் பயிரிடுகிறார்களேயன்றி சோளத்தானியம் பயிரிடுவதில்லை.

இதற்குக் காரணம் என்னவென்று விசாரித்தால் சோளம் கதிர் வாங்கி முற்றும்போது "பால் ஒழுக்கு" உண்டாகிக் கதிர் கள் கெட்டுப்போகின்றனவென்றும், அதனால்தான் சோளம் கரிச லில் சாகுபடி செய்வதில்லை யென்றும் சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் இதுசரியான காரணமாக எமக்குத் தோன்றவில்லை. இற வையில் சோளம் சாகுபடி செய்யும்போது சிலவேளைகளில் "பால் ஒழுக்கு" உண்டாகிறது. இதைக் கிருஷிகர் ஒப்புக்கொள்ளுகிறார் கள். அதனால் இறவையில் சோளம் சாகுபடி செய்யாமல் விட்டுவிடு கிறார்களா? இல்லை. ஆகையால் அது சரியான முகாந்திரமல்ல. சிலர் சோளம் விளைவடையப்போதுமான மழைகள் பெய்வதில்லை என்று சொல்லுகிறார்கள். இதுவும் வாஸ்தவமல்ல. ஏனெனில் நாற்றுச்சோளம் சரியாய் வளர்ந்து முற்றி விளைவாகி அதிலிருந்து விதை எடுக்கிறார்கள். இப்படி பயிராகும் நாற்றுச் சோளத்தின் ஓரங்களில் பாய்ச்சோளம் என்னும் ஒரு வகையான வெள்ளைச்சோ ளத்தைக் கலந்து விதைத்திருப்பதை நாம் அடிக்கடி காண்கிறோம். அந்தப் பாய்ச்சோளமும் கதிர்வாங்கி விளைவடைகின்றது. இப்படி யிருப்பதால் மழைக்குறைவு இதற்கு ஒரு காரணமாகச் சொல்ல இடமில்லை. நாம் முன் சொன்னபடி இந்தத் தாலூகாக்களில் உள்ள கிருஷிகர் கம்பஞ்சோறு உண்ணும் ஜனங்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தத் தானியமே பழக்கத்தினால் பிரியமான உண வாயிருக்கிறது போலும். ஆகையால் சோளத்தில் அவர்களுக்கு மனஞ்செல்லவில்லை யென்றே நினைக்கவேண்டியதாயிருக்கிறது.

இது எப்படியிருந்தாலும், கரிசல் நிலங்களையுடைய கிருஷிகர் சோளப்பயிரைக் கைக்கொள்ளாமலிருப்பது பெரும் பிசகு என்று நாம் நினைக்கிறோம். எப்படியென்றால்

1. கம்பு விசேஷமாய் ஆகாரதானியமாகப் பயிர்செய்யப்படும் தென்னார்க்காடு ஜில்லாவில் சென்ற ஐந்து ஆறு வருஷங்களாக ஒருவகையான கம்பிளிப்பூச்சி யுண்டாகிக் கம்புப்பயிருக்கு அதிகமான கெடுதியுண்டாக்குகிறது. அந்த ஜில்லாவில் இதற்கு முன்னால் கம்புப்பயிரில் கம்பிளிப்பூச்சி விழுந்ததேயில்லை. ஐந்து ஆறு வருஷக்காலத்துக்குள் இந்தப்பூச்சியானது பரவிச்செய்திருக்கும் கெடுதிக்கு அளவில்லை. ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்கும் ஓரூரிலிருந்து மற்ற ஊர்களுக்கும் இந்தப்பூச்சி பிரயாணம் செய்து போகிறதைப்பார்க்க அதிக ஆச்சரியமாயிருக்கிறது. இப்படி பிரயாணம்செய்யும் பூச்சிகள் ஒருக்கால் நாளாவட்டத்தில் மற்ற ஜில்லாக்களுக்கும்போய்க் கெடுதிசெய்யக்கூடும். அயல் ஜில்லாக்களுக்கு இவைகள் பரவாமலிருக்கும்படி கடவுள் அருள்புரிவாராக. அப்படி ஒருவேளை இவைகள் பரவிவிட்டால் ஐயோ! திருநெல்வேலி ஜில்லாக் கரிசல் நிலக்குடிகளுக்கு இதைவிடப் பெரிய விபத்து என்னநேரிடக்கூடும்? அவர்களுக்கு பருத்தியும் கொத்தமல்லியும் கடலையுந்தான் நிலைக்கும். சாப்பாட்டுக்கு ஒன்றுமிருக்காது. அவர்கள் பயிரிடும் செவ்வல் நிலங்களிலும் கம்புதான் விளையும். சோளம் புன்செய்த் தானியமாகச் செவ்வலில் பயிரிடப் போதுமான மழைபெய்யாது. வெகுநாளைக்கு செவ்வல் நிலங்களில் ஈரந்தங்காது. ஆகையால் செவ்வல் புன்செய்களில் இறவையின்றிச் சோளம் பயிர் செய்யமுடியாது.

2. செவ்வல் நிலங்களிலும், கரிசல் நிலங்களிலும் கிருஷிகர் தற்காலத்தில் சோளநாற்று பயிரிட்டு கால் நடைத் தீவனமாய் உபயோகப்படுத்துகிறார்கள். அவர்கள் பயிர்செய்யும் கம்பந்தட்டை கால் நடைகளுக்கு அவ்வளவு நல்ல தீவனமாவதில்லை. சாதாரணமாய்ச் சில விடங்களில் கம்பந்தட்டையை விறகுக்குப் பதிலாய் எறிக்கிறார்கள். இன்னும் சில விடங்களில் கம்பந்தட்டை கொண்டு வீட்டுக்கூரை வேய்கிறார்கள். கம்புப்பயிருக்கு பதிலாய் சோளம் பயிர் செய்தால் தானியம் மனிதருக்கு ஆகாரமாவதுமன்றி சோளத்தட்டை கால் நடைகளுக்கு நல்ல ஆகாரமாகும். ஆகையால் கம்புப் பயிரைப்பார்க்கிலும் சோளத்தைக் கரிசல் நிலங்களில் சாகுபடிசெய்வது மேலாகும்.

எவ்வகையான சோளம் கரிசல் நிலங்களுக்கேற்றது என்பதை யோசிக்கவேண்டும். தற்காலத்தில் பாய்ச்சோளம் கரிசலில் பயிராவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்தத் தினுசைத்தடையின்றி முதலில் பயிரிடலாம். ஆனால் பாய்ச்சோளம் கம்புபோல

அதிக மேனிகாணுது என்றும், இறவையில் பயிராகும் வெள்ளைச் சோளத்தைப்போல் நல்ல ஆகாரமாயிருக்காது என்றும் கிருஷிகர் நினைக்கக்கூடும் சரியானபடி எருவிட்டுக் களைவெட்டி ஜாக்கிரதையுடன் பயிரிட்டால் இந்தச் சோளமும் அவைகளுக் கொப்பந்தமான விளைவு கொடுக்கும் என்பதில் தடையில்லை.

காலநிலை மழைப்பதம் முதலிய விஷயங்களில் திருநெல்வேலி ஜில்லாவைப்போலவே இருக்கும் மற்ற ஜில்லாக்களில் என்ன செய்கிறார்கள் என்று கவனித்தாலும் நாம் சொல்வது சரியென்று தெரியவரும். உதாரணமாகக் கோயம்பத்தூர் ஜில்லாவின் மழைப்பதம் காலஸ்திதி நிலத்தின் இயல்பு இவைகளெல்லாம் அநேகமாகத் திருநெல்வேலி ஜில்லாவுக்கு ஒப்பாக இருக்கும் என்று சொல்லலாம். அந்த ஜில்லாவிலுள்ள கரிசல் புன்செய் நிலங்களில் "பெரியமஞ்சள் சோளம்" என்னும் ஒரு தினுசுச் சோளம் பயிர் செய்யப்படுகிறது. இதுவே கோயம்பத்தூர் ஜில்லாவிலுள்ள கிராமாந்திர ஜனங்களுக்கு முக்கியமான ஆகாரதானியம். இந்தச் சோளத்தின் தட்டையானது கால்நடைகளுக்கு அதிக சத்துள்ள தீவனமாக எண்ணப்படுகிறது. இப்படி கால்நடைகளுக்கும் ஜனங்களுக்கும் அதிக உபயோக முள்ளதாயிருப்பதால்தான் அதற்குப் "பெரிய மஞ்சள்சோளம்" என்னும்பேர் ஏற்பட்டிருக்கிறதாம். இந்தத்தானியம் மற்ற வகைச் சோளத்தை விடப்பெரிதல்ல. இதைத் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கரிசல் நிலங்களில் செப்டம்பர் மீ முதல் ஜனவரி மீ வரை சாகுபடி செய்யக்கூடும். அது சந்தேகமில்லாமல் வெகுநேர்த்தியாய் வளர்ந்து நல்ல மேனியும் கொடுக்கும். கம்புப் பயிரில் கம்பளிப்பூச்சி விழுந்து கெடுதி செய்யுமானால் அதை முற்றிலும் கைவிட்டு இந்தச்சோளத்தையே பிரதானமானபயிராகவைத்துக்கொள்ளலாம். ஆனால் வாஸ்தவத்தில் கம்புப்பயிருக்குக் கெடுதி யுண்டாகும் வரை நமது கிருஷிகர் காத்திருக்கக்கூடாது. அப்படிக் கெடுதி யுண்டாகவேண்டுமென்று ஒருவரும் விரும்பவில்லை; என்றாலும் முன் கூட்டியே ஜாக்கிரதையாயிருப்பது புத்திசாலிகளுடைய காரியமாதலால் நாமும் முன் கூட்டியே ஜாக்கிரதைப்பட்டு இவ்விஷயத்தில் வேண்டும் காரியத்தைச் செய்துகொள்ளவேண்டும். திடீரென்று ஒருவிபத்து சம்பவிக்கும்போது என்ன செய்வதென்று தோன்றாமல் கிருஷிகர் மனமிடிந்து கையைக்கட்டிக்கொண்டு "இந்தத்தலைவிதிக்கு என்ன செய்யலாம்!" என்று அழுவார்கள். அப்படி செய்யக்கூடாது. இப்போதே கொஞ்சம் விஸ்தீர்ணத்தில் அநேக தினுசு சோளத்தை நாம் மேலே சொல்லியிருக்கும் தினுசுகளுடன் சாகுபடிசெய்து பரிக்ஷிக்கவேண்டும்.

இப்படி யார்தான் முதல் முதல் செய்து வழிகாட்டுவது? விவசாய சங்கத்தில் மெம்பர்களா யிருக்கும் கனவான்

கள் தங்கள் நிலங்களில் கொஞ்சப் பாகத்திலாவது இந்தப் பரீக்ஷையை நடத்திப்பார்க்கவேண்டும். அவர்களைப்போலவே நமது "கிருஷிகன்" பத்திரிகையை வாசிக்கும் பெரிய குடித்தனக்காரரும் செய்துபார்க்கவேண்டும். அறிவீனம் மிகுந்த ஏழைக்குடிகள் என்னசெய்வார்கள்.? அநேக தலைமுறைகளாகத் தங்கள் முன்னோர்கள் செய்துவந்த காரியங்களைக் கைவிட்டு வேறு நூதனப் பழக்கங்களைக் கைக்கொள்ள அவர்கள் எளிதில் சம்மதப்படமாட்டார்கள். அவர்கள் கண்ணெதிரேவேறு யாராவது ஒன்றை நடத்திப் பயன்பெற்றால் அவர்களும் அதை நடத்திப்பார்ப்பார்கள் என்பதில் தடையில்லை. கவர்ன்மெண்டாரும்இவ்விஷயத்தைக் கவனித்துத் தங்கள் பரீக்ஷைப் பண்ணைகளிலுள்ள கரிசல் நிலங்களில் மேற்சொன்ன பரீக்ஷையை நடத்தி ஜனங்களுக்துக் காட்டவேண்டும். இப்படி செய்வது தென் ஆர்க்காட்டிலிருந்து கம்பளிப்பூச்சிகள் மற்ற ஜில்லாக்களுக்குப் பரவுவதற்கு முன்னால் செய்யவேண்டுமென்பதுவே நம்முடைய முக்கியமான கோரிக்கை. காலநிலையும் மழைப்பதமும் நிலத்தின் இயல்பும் சோளப்பயிருக்கு ஏற்றதல்லவென்று ஒருவரும் பயப்படவேண்டியதே இல்லை. நம்முடைய அநுபவத்தில் இந்தப் பரீக்ஷை அநுகூலமாய் முடிவுபெற்றிருக்கிறது. ஆகையால் எல்லாரும் இந்தப்பரீக்ஷையை நடத்திப்பார்க்கலாம். இது நடத்துவதற்கு இப்போதுதான் ஏற்றசமயம்.

கால்நடைகள்

CATTLE

கிருஷிகருக்குக் கால்நடைகள் மிகவும் அவசியமான ஜந்துக்கள் என்று நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை. இங்கிலாந்து முதலிய தேசங்களில் உழவு முதலிய விவசாயத்தொழில்களைக் குதிரைகளைக்கொண்டும், நீராவி, மின்சாரம் முதலியவைகளைக்கொண்டும் நடத்திவருகிறார்கள். நமது தேசத்துக்கு அவைகள் தற்காலத்தில் சரிப்படா. உழவு, பரம்படித்தல் விதைவிதைத்தல் எருவேற்றல், நீர்ப்பாய்ச்சல் பயிரடித்தல், போரடித்தல் முதலிய சகலவேலைகளையும் கால்நடைகள்தான் செய்கின்றன. மேலும் கிருஷிக்குப் பிராணாதாரமாயிருக்கும் தொழு எரு கால்நடைகளிலிருந்து கிடைக்கிறது. போஜனபதார்த்தங்களான பால், தயிர், மோர், வெண்ணெய், பாற்கட்டி, நெய் முதலியவைகளும், மாம்சமும் கால்நடைகளிலிருந்தே கிடைக்கின்றன. இப்படி எல்லாவகைகளிலும் கிருஷிகருக்கு உபயோகமுள்ள கால்நடைகளைப் பாதுகாக்கும்வழி தற்காலத்தில் நமது கிருஷிகருக்குத் தெரியவில்லை. அதனால் வருஷாவருஷம் தவறாமல் எல்லா ஜில்லாக்களிலும், வெக்கை, மென்னை அடைப்பான், அடைப்பான், சப்பை நோய், அம்மை, முதலான

பலவித காரணங்களால் ஆயிரக்கணக்கான கால்நடைகள் இறந்து போகின்றன. அதனால் கிருஷிகருக்குண்டாகும் பெருத்த நஷ்டம் சிலருக்கு நன்ருய்த் தெரியாது. கிராமாந்திரங்களுக்கு அடிக்கடி சென்று கிருஷிகருடன் பழகிவரும் சிலருக்குமட்டும் நன்ருய்த் தெரியும். சென்ற வருஷத்தில் திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலூகாவில் சேர்மாதேவி, அம்பாசமுத்திரம், பாப்பான்குளம் வடச்குவீரவநல்லூர் கல்லிடைக்குரிச்சி, முதலான கிராமங்களில் பெரிய பண்ணைகளுள்ள கிருஷிகர் அடைந்த நஷ்டத்தை நாம் நேரில் கண்டும், அவர்கள் சொல்லக்கேட்டும் இருக்கிரேரும். இன்னும் பல ஜில்லாக்களில் இவ்விஷயத்தைப்பற்றி சர்க்காரார் வெளிப்படுத்தும் விருத்தாந்தங்களை வாசிக்கும்போதும் நமக்கு உண்டாகும் மனவருத்தத்துக்கு அளவில்லை. ஆகையால் இக் கால்நடைகள் இப்படி அநியாய மரணமடையாமல் காப்பாற்றும் விதங்களை நமது கிருஷிகர் அறியவேண்டியது அத்யாவசியம்.

ஆனல் தற்காலத்தில் கிருஷிகருடைய கால்நடைகளுக்கு எவ்விதமான நோய்கள் உண்டானலும், அவர்கள் உடனே ஊர்மாடு மேய்க்கும் இடையனைக்கூப்பிட்டுக் காட்டுகிருர்கள். தலைமுறை தத்துவமாக அந்த இடையன் கற்றுக்கொண்ட சிலசிகிச்சைகள் மட்டும் அவனுக்குத்தெரியும். கால்நடைகள் தீவனம் தின்னவில்லையென்ருல் அது என்னகராணம் பற்றியிருந்தபோதிலும், அதற்கு அவனுக்குத்தெரிந்தபக்குவம் ஒன்றே. முக்கியமாய் "தொத்துகிற சுவாசாசய அழற்சி" யென்னும் ஒருவிதகெட்ட வியாதியுண்டாகும்போது வெகுஜாக்கிறதையாய்க் கால்நடைகளைப்பர்ர்க்கவேண்டும். காரசார மானபதார்த்தங்களை அந்தவியாதி பீடிக்கும்போது கால்நடைகளுக்குக் கொடுக்கக்கூடாது. ஆனல் நாட்டுவைத்தியக் கோனர்கொடுப்பது சுக்கு, மிளகு திப்பிலி, ஓமம், ஆடுதின்னப் பாளை இலை இவைகள்தான். இப்படி நமது கிருஷிகர்தங்கள் கால்நடைகளை அறிவீனமுள்ள இடையர்களைக் கொண்டுசிகிச்சை செய்ய இடங்கொடுச்காமல், தாங்களே கால்நடைவியாதி சிகிச்சையைக்கொஞ்சம் கற்றுக்கொள்ளுவார்களாகில் உத்தமமாயிருக்கும்.

இந்த நோக்கத்தைக்கொண்டு நமது பத்திரிகையில் அப்போதப்போது கால்நடைகளுக்கு சம்பவிக்கும் முக்கியமான வியாதிகளையும் அவைகளுக்கு நடத்தவேண்டிய சிகிச்சை முறைகளையும்பற்றி எழுதிவருவோம். அப்படி செய்யுமுன் கால்நடைகளுடையவர்கள் பொதுவாய் கவனிக்கவேண்டிய சில சுகாதாரமுறைகளை இங்கெழுதுகிரேரும்.

1. புதிதாக சந்தைகளிலாவது மற்ற ஊர்களிலிருந்தாவது கால்நடைகளை வாங்கிவரும்போது, அவைகளை முன்னுள்ள கால்நடைகளுடன் கலக்கவிடாமல், வேருய்க்கட்டிவைக்கவேண்டும்.

2. அவைகளை ஒருவாரம் அல்லது 10-நாள் வரையும் ஜாக்கிறதையாய்ப்பார்த்து, மயிர்ச்சிலிர்ப்பு, முதுகுகூனல், தீனிதின்னுமை, அசைபோடாமை, சாணி இழக்கம் முதலான குறிகள் உண்டாகின்றனவா வென்று கவனிக்கவேண்டும்.

3. ஒரு ஊரிலிருந்து கால் நடைகளை வாங்கிக்கொண்டுவரும் வழியில் மற்றக்கால் நடைகளுடன் கலக்கவிடக்கூடாது. வழியில் தொழுக்களிலும் கால்நடைகளைக் கட்டிவைக்கலாகாது.

4. வெயிலில் கால்நடைகளை நடத்திக்கொண்டுபோகக்கூடாது. ஒருநாளில் 12-மைலுக்கதிமாக நடத்தவுங்கூடாது. வழியில் சரியான தீவனம்போட்டுப் போஷித்துவரவேண்டும்.

5. சில சமயங்களில் கால்நடைகளுக்கு ஓரிடத்தில் தாக்கின வியாதிமுதிர்ந்து வெளிப்பட இரண்டு மூன்றுமாதக் காலமாவதுமுண்டு. அவ்வளவுகாலம் புதுக் கால்நடைகளைப் பிறித்துவைத்திருக்க முடியாதாயினும், அதுவரை அவைகளை நன்றாய்க் கவனித்து வரக்கூடும்.

6. வியாதியுண்டானவுடனே அந்தக் கால்நடைகளை மற்றவைகளுடன் வைக்காமல் வேருகக்கட்டி சிகிச்சைசெய்யவேண்டும்.

7. அவைகளுக்குப்போட்ட வைக்கோலையாவது வேறு எந்த பதார்த்தத்தையாவது சுகமான கால்நடைகளை தின்னவிடக்கூடாது. சுகமான கால்நடைகள் வியாதிப்பட்டவைகளின் சமீபத்தில்போக இடங்கொடுக்கலாகாது.

8. வியாதிப்பட்ட கால்நடைகளின் சாணி முதலியவைகளை ஆழமான குழிதோண்டிப் புதைத்துவிடவேண்டும்.

9. வியாதிப்பட்ட கால்நடைகளுக்கு நீர்மயமான அரிசிக் கஞ்சியையும் இளம்புல்லையும் போட்டு வரவேண்டும்.

10. தொத்துவியாதியினால் இறந்த கால்நடைகளை ஆழமான குழி தோண்டிப் புதைத்துவிடவேண்டும்

11. தொத்துவியாதி சம்பவித்திருக்கும் இடங்களை வெகு சுத்தமாய் வைத்தும் அடிக்கடி சுத்தப்படுத்தியும் வரவேண்டும்.

12. தொத்துவியாதி பரவுங்காலங்களில் ஒருவருக்குள்ள கால்நடைகளையெல்லாம ஒரே இடத்தில் ஒரே கூட்டமாய்க் கட்டி வைக்காமல் வெவ்வேறு சிறு கூட்டங்களாகப் பிரித்து வெவ்வேறிடங்களில் கட்டிவைப்பது நலமாயிருக்கும்.

13. வியாதிகண்ட கால்நடைகளை நன்றாய்க்கவனித்து அவைகளுக்கு நேரிட்டிருக்கும் வியாதி இன்னதுதான் என்று திட்டமாய்த் தெரிந்துகொண்டு அவைகளுக்குத் தக்கசிகிச்சை செய்யவேண்டும்.

கார்நெல் தினுசுகளில் விதை பொறுக்கல்

SEED SELECTION IN KAR PADDY

தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களின் அநேக பாகங்களில் கார்தினுசு நெல்பயிர் இப்போது அறுவடையாகிறகாலம். நமது கிருஷிகர் அறுவடைகாலத்துக்கு முன்னமே வயல்களிலுள்ள பயிரைச் சுற்றிப்பார்த்து, செழிப்பாய்வளர்ந்து நீண்டகதிர்களுடன் விளைவாயிருக்கும் வயலில் அறுவடையாகும் நெல்லை விதைக்காக வைத்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்துக்கொள்ளுகிறார்கள். அப்படியே அந்தவயல் அறுப்பாகுந்தினத்தில் வேறு வயல்களில் அறுப்பான கதிர்கள் அவைகளுடன் கலக்காமல் வேறாய்ப் போர் அடித்துத் தூற்றி மறுவில்லாத நெல்லைக் களமேட்டில் வைத்தே நன்றாய் நாலைந்துநாள் காயப்போட்டுப் பின் மறுபடி வீசிப் பதர்பிறித்து வேறாக்கியபின் நெல்விதையைக் கட்டிக் குதிர்களில் சேகரித்து ஈரம் ஏறாமல் காப்பாற்றிவைப்பார்கள். ஆகையால் விதை பொறுக்குவதின் அனுகூலம் நமது கிருஷிகருக்குத் தெரியாமலிருக்கவில்லை. என்றாலும் அவர்கள் சரியானபடி விதை பொறுக்குவதில்லை. விதைபொறுக்குவதில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய பிரமாணங்கள் என்னவென்று அவர்கள் தெரிந்துகொள்ளச் சிரமப்படுவதில்லை. ஆகையால் இந்தத் தருணத்தில் கார்நெல் தினுசுகளின் விதை சேகரிக்கும்போது அவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய சில பிரமாணங்களை அவர்களுக்குத் தெரிவிப்பது முக்கியமென்று நினைத்து அவைகளைச் சுறுக்கமாய் இங்கு வெளியிடுகிறோம்.

1. எந்த வயலின் பயிரிலிருந்து விதை பொறுக்கலாம் என்று பார்க்கும்போது, தண்ணீர்த் தட்டுக்குள்பட்டிருந்தும் அதை ஒரு பொருட்டாக்காமல் நன்றாய்க் கதிர்வாங்கி விளைந்திருக்கும் வயலைத் தெரிந்தெடுப்பது உத்தமம்.

2. நடுகை செய்யப்பட்ட பயிரில் சிலவேளைகளில் அநேக தினுசுநெல் நாற்று கலந்து நடுகை செய்யப்பட்டிருக்கும். ஒவ்வொரு நடுகையிலுங் கூட பலவகையான நாற்றுகள் சேர்ந்து நடுகையாகி யிருக்கலாம். ஒரு நடுகையிலுள்ள எல்லாக் கதிர்களிலும் சுத்தமாய் ஒரேதினுசு நெல்லே விளைவாயிருக்குமென்று சொல்ல முடியாது. ஆகையால் நெல்விதை பொறுக்குவதில் எந்தத் தினுசு நெல்விதை அவசியமோ அந்தத் தினுசுக் கதிர்களாய்ப் பார்த்து ஒவ்வொரு கதிராய்ப் பொறுக்கவேண்டும்.

3. அப்படி கதிர்களைத் தெரிந்தெடுப்பதில் மற்றவைகளை விட அதிக நீளமாயிருக்கிற கதிர்களில் நெறுக்கமாய் நெல்மணிகள் அடுக்கியிருக்கிற கதிர்களையே எடுக்கவேண்டும். அதாவது ஒரு வயலிலுள்ள கதிர்கள் பொதுவாக 8-அங்குல நீளமாயிருந்தால்,

அதைவிட அதிக நீளமான கதிர்களை எடுக்கவேண்டும். அப்படி எடுக்கும் கதிர்கள் 9 அங்குல நீளமாயிருந்ததென்று வைத்துக்கொள்வோம். 9 அங்குல நீளமுள்ள பல கதிர்களில் சாதாரணமாய் ஒவ்வொன்றிலும் 200 நெல்மணிகள் இருந்தனவென்று வைத்துக்கொள்ளுவோம். அவைகளில் ஒரு கதிரில் 230 அல்லது 240 நெல்மணிகள் இருந்தால் அந்தக்கதிரிலுள்ள நெல்லையே விதைக்காக வைத்துக்கொள்ளவேண்டும். இப்படிசெய்வதில் அதிகசிரமம் இருக்கிறதென்று விட்டுவிடக்கூடாது. ஏனென்றால் சிரமமில்லாமல் எந்தப் பெரிய காரியந்தான் கைகூடும்?

4. இப்படி செய்வதில் நோய் நொடிக்குட்படாத தாள்களைப் பார்த்துத் தெரிந்தெடுக்கவேண்டும்.

5. மேலும் ஒரேநாற்றிலிருந்து அநேக பக்கத்தாள்கள் கிளைத்து மூடுகட்டிக் கதிர்வாங்கி யிருப்பவைகளில் மேற்சொன்னபடி சிறந்த கதிர்கள் வாய்த்தால் இன்னும் மேலாகும்.

6. கதிர்களிலுள்ள நெல் மணிகள் பருத்தும் திரட்சியாயும் மெல்லிய உமியுள்ளதாயுமிருக்கவேண்டும். இடையில் முற்றாத கருக்காய் உள்ள கதிர்களைப் பொருக்கக்கூடாது.

7. பொருக்கின கதிர்களை வேறாக அடித்து நெல் உதிர்த்துத் தூற்றிக் காயவைத்துக் குதிர்களில் போட்டுவைக்கவேண்டும்.

8. இப்படிச் சேகரித்த விதையின் அளவு வெகு கொஞ்சமாயிருந்தாலும் போதுமானது. அதை வேரே ஒரு நாற்றங்காலில் நாற்றுவிட்டு அந்த நாற்றைத் தனியே நட்டு அதிலிருந்து மறுவருஷம் மேற்சொன்னபடியே விதை பொருக்கியெடுத்து இப்படியே வருஷாவருஷம் செய்துவந்தால், சில வருஷங்களில் சுத்தமானதும் கலப்பில்லாததும், சிறந்ததுமான ஒரு தினிசு நெல் ஏற்படும். அதில் கிடைக்கும்மாசூல் ஏராளமாயிருக்கும். அது தண்ணீர்த்தட்டைத்தாங்கும். ஆகையால் இத்தருணத்தில் கிருஷிகர் மேற்சொன்ன பிரமாணங்களைக் கூடியவரையில் கவனித்துப் பின்பற்றுவார்களென நம்புகிறோம்.

கடிதம்

CORRESPONDENCE

கிருஷிகன் பத்திராதிப ரவர்களுக்கு

ஐயா,

சைதாப்பேட்டையிலுள்ள ரங்கராஜு அவர்களுடைய "ஜகன்னாத பாக்" தோட்டத்தை இன்று சுற்றிப் பார்த்துவந்தோம். அதில் அநேக விதமான தோட்டப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட் டிருப்பதுடன் நன்செய் புன்செய் நிலங்களில் தழையெருவுக்காகச் சடம்பும்கொள்ளும் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. சடம்பு சுமார் 8-அடி உயரம்வரை வளர்ந்து பூத்திருக்கிறது. கொள்ளுப்பயிர் செழிப்பாய் வளர்ந்து படர்ந்து நிலத்தை

முழுவதும் மூடியிருக்கிறது. இது புஷ்பிக்கும் பருவமாயிருக்கிறது. இதைப் பூத்துக் காய்க்கவிட்டு அறுவடைசெய்தால் ஏக்கர் ஒன்றுக்குக் குறைந்தது 300 பக்காவுக்குக் குறையாமல் கிடைக்குமென்பதில் தடையில்லை. இப்படி இருந்தாலும் ரங்கராஜு அவர்கள் இந்தப் பயிர்களை நிலத்தில் உழுது எருவாக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்படி பசுந்தாள் எருவாகச் செய்வதற்காகவே இந்தப் பயிர்களைச் சாகுபடி செய்ததாக அவர்கள் சொல்லுகிறார்கள். சாதாரணமாய் இந்தப் பயிரை யாராவது பார்த்தால் இதைக் காய்க்கவிடாமல் நிலத்தில் உழுது உரமாக்குவது மதியீனமென்று நினைப்பார்கள். ஆனால் இப்படி பசுந்தாள் எருச்செய்து விர்த்திசெய்யப்பட்ட இந்தத் தோட்டத்திலுள்ள சில நிலங்களையும் அக்கம் பக்கத்திலுள்ள நிலங்களையும் பார்த்தால் ரங்கராஜு அவர்கள் செய்வது சரிதான் என்று தெரியவரும். இவ்விராஜதானியில் கிருஷி அபிவிர்த்தியில் நோக்கமுடைய எல்லா மிராசுதார்களும் சமயம் வாய்க்கும்போதெல்லாம் ரங்கராஜு அவர்கள் செய்துவரும் விவசாயப் பருவங்களைப் போய்ப்பார்த்து அனுகூலமடையவேண்டுமென்பது என்னுடைய மனப்பூர்வமான கோரிக்கை. இதை எல்லாரும் அறியும்படியாய்த் தங்களுடைய பத்திரிகையில் வெளிப்படுத்துவீர்களென நம்புகிறேன்.

20—8—09.

T. B. Ramachandra Rao,
Manager, Rajagopalapuram Estate,
Tanjore Dt.

தென்னிந்தியா கைத்தொழில்
விர்த்திசம்பந்தமான கூட்டம்
THE SOUTH INDIAN INDUSTRIAL CONFERENCE

சென்ற ஜூன்மீ 16-உ யன்று பரம்பூரில் கூடிய இக்கூட்டத்தில், அக்ராசனாதிபதியாயிருந்த ம-ா-ா-ஸ்ரீ, பெர்ராஜு பந்துலுகாரு விவசாய சம்பந்தமாகப் பேசியவிஷயங்களில் முக்கியமானவைகளாவன:—

இந்துதேசத்தின் மற்றப் பாகங்களைப்போலவே நமது இராஜதானியிலும் கிருஷியே ஜனங்களுக்குப் பிரதான ஜீவனாதாரமாயிருக்கிறது. மேலும் இங்கே கொஞ்சநிலம் வைத்துக்கொண்டிருக்கும் கிருஷிகர் நிரம்பியிருக்கின்றனர். ரோட்டு செஸ் கிராம ஊழியம்நீக்கி நிலத்தீர்வைக்கே இவ்விராஜதானியில் சர்க்காருக்கு 489-லக்ஷம் ரூபாய் வருஷாவருஷம் செலுத்துகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் தீர்வைத் தரிசுநிலங்கள் அதிகமாய்க் கைப்பற்றுக்கு வந்துகொண்டிருக்கின்றன. அதிக இலாபம் தரக்கூடிய கைத்தொழில்கள் பூச்சியமாயிருப்பதாலும், ஜனத்தொகை வரவர அதிகப்பட்டுக் கொண்டிருப்பதாலும் நிலமே எல்லாருக்கும் ஆதாரமாக இருக்கிறது. சாகுபடிக்கு லாயக்கான நிலங்கள் எல்லாம் கைப்பற்றுக்கு வந்துவிட்டன. குடும்பங்கள் பாகம் செய்துகொள்ளுவதால், நிலங்கள் பிறிவுபட்டு, ஒவ்வொரு பட்டாதாருக்கும் பத்து ஏக்கருக்குக் குறைந்த விஸ்தீரணமே ஏற்பட்டிருக்கிறது. நிலங்களுக்குத் தண்ணீர்பாயும்படிக்கான பாய்ச்சல் சாதனங்களை நம்:பிராஜதானியில் சர்க்காரில் ஸ்தாபிப்பதற்காக நாம் நன்றியறிதலுள்ளவர்களா யிருக்கவேண்டும். இப்பாய்ச்சலாதாரங்களினால் சுமார் 30-லக்ஷம் ஏக்கர் நிலங்கள் நன்செய்சாகுபடியாகி வருகின்றன என்றாலும் நமது விவசாயத்திலிருக்கும் முக்கியமான குறைவு

என்னவெனில் சுருக்கமான இடத்தில் விசேஷமாய் எருவிட்டு அதிகப் பிரயாசைப்பட்டு அதிகமான விளைவையுண்டாக்காமலிருப்பதுதான். நமதுஇராஜாங்கத்தார் கொஞ்சக்காலமாக விவசாயவிருத்தி விஷயத்தில் கவனம் செலுத்திவருகிறார்கள். விவசாய இலாகா உத்தியோகஸ்தர் நூதனமாய் நேமுகம் செய்யப்பட்டு வருகிறார்கள். கோயம்புத்தூர் விவசாயக் கல்விச்சாலையும் பரீக்ஷைகளும், அவைகளிலிருந்து வெளியிடப்படும் விஷயங்களும் விவசாய விர்த்திக்கு அநுகூலமாயிருக்கின்றன. எல்லா ஜில்லாக்களிலும் இப்போது விவசாயசங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சென்னையில் விவசாய மகாசபையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. என்றாலும் இவைகளால் இதுவரையும் அதிகப் பிரயோஜனம் கிருஷிகருக்கு உண்டானதாய்த் தெரியவில்லை. நூதன விவசாய விஷயங்களைக் கிருஷிகர் அறியாமலிருப்பதற்கு முக்கிய காரணம் அவர்கள் கல்வி யறிவில்லாமலிருப்பதே தான். கிராமங்களில் பொதுவாய்க் கல்வி கற்பிக்கப்படுவதுடன் விவசாய விஷயங்களும் கற்பிக்கப்படவேண்டும்.

நமக்கு தற்காலத்தில் அவசியமான முக்கிய சீர்திருத்தங்களாவன (1) கிருஷிகருக்கு நூதன விவசாய, ரசாயனக்ஞானம் உண்டாக்குவதற்காக ஒவ்வொரு ஜில்லாவின் பிரதான நகரத்திலும் விவசாயப் பள்ளிக்கூடமும் பரிக்ஷைப் பண்ணையும் ஸ்தாபிக்கப்படவேண்டும் (2) கிராமாந்திரங்களிலுள்ள பிள்ளைகளுக்கு விவசாய அறிவு விர்த்தியாவதற்கும் விவசாயக்கருவிகள் செய்யப் பழக்குவதற்கும் கிராம விவசாயப் பள்ளிக்கூடங்களும் தோட்டப் பண்ணைகளும் ஸ்தாபிக்கப்படவேண்டும். (3) நூதன விவசாயப் பழக்கங்களையும், நூதன விவசாயக் கருவிகளின் உபயோகங்களையும், நூதன விளைபொருட்களின் உபயோகங்களையும் கிராமங்களுக்குப்போய் அங்குள்ள கிருஷிகருக்கு போதிப்பதற்காக சில உத்தியோகஸ்தர்களை நேமிக்கவேண்டும். (4) இந்த தேசத்தில் கரும்பு, சாகுபடியும் சர்க்கரைக் கைத்தொழிலும் முன்னிலுமிப்போது அதிகமாய் க்ஷீணித்துப்போயிருக்கிறது. இதைப்போன்ற விசேஷப் பயிர்களை விர்த்திசெய்வதிலும், கைத்தொழில்களை யுண்டாக்குவதிலும் சர்க்காரில் கிருஷிகருக்குத் தக்க உதவி புரியவேண்டும்.

நமது இராஜதானியில் 649-ஜமீன்தார்களும் மிட்டாதார்களும் இருக்கிறார்களென்றும் இவ்விராஜதானியின் விஸ்தீரணத்தில் மூன்றில் ஒருபாகம் அவர்களுக்குச் சொந்தமாயிருக்கிறதென்றும் அநேகருக்குத் தெரிந்திருக்காது. அவர்கள் வருஷா வருஷம் சர்க்காருக்கு 50 லக்ஷம் ரூபாய் பேஷ்கிஸ்து செலுத்துகிறார்கள். ரயத்துவாரி நிலங்களில் 30-வருஷத்துக்கொருதரம் புது செட்டில்மெண்டு ஏற்படுத்தி நிலங்களின் தீர்வை அதிகப்படுத்துகிறார்கள். இவ்விதமாக இந்த ஜமீன்தாரி நிலங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பேஷ்கிஸ்தை அதிகப்படுத்துவதில்லை. அப்படியிருந்தும் இந்த ஜமீன்தார்கள் விவசாய விருத்தி விஷயத்தில் தேச க்ஷேமத்தை அதிகப்படுத்துவதற்கும் இதுவரை என்னதான் செய்திருக்கிறார்கள்? அவர்களின் கௌரவமும் செல்வமும் சம்பத்தும், ஏழைக்குடியானவர்களிடத்தில் அவர்கள் வசூல்செய்யும் நிலத்தீர்வையினாலே ஏற்பட்டதாயிருக்க, அந்தக் குடிகளின் க்ஷேமத்தை உத்தேசித்துத் தங்கள் ஜமீன்களில் விவசாயப் பண்ணைகளை ஸ்தாபித்து அங்கு நூதன விவசாயமுறைகளைக்குடிகளுக்குத் தெரியும்படியாய் நடத்திக் காட்டக்கூடாதா? இவர்கள் எவ்வளவோ நன்மை குடிகளுக்கு செய்யக்கூடும். விவசாயவிர்த்தி விஷயத்தில் சர்க்காரில் இன்னமும் அதிகமான கவனத்தை செலுத்தவேண்டும். பட்டுப்பூச்சிகளை விர்த்திசெய்து பட்டுநூல் அதிகமாக உண்டாக்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்யவேண்டும்.

புரட்டாசிமாதப் பருவங்கள்
THE MONTH'S OPERATIONS

இம்மாதத்துடன் கார்காலம் முடிவாகும். இம்மாதத்தில் எங்கும் தம்பலப்பூச்சிகள் உண்டாகும். மயில், கேகயம் மகிழும். வெண்காந்தள், செங்காந்தள், கொன்றை கூதாளம், வேங்கை, காக்கணம், கடம்பு, காயா, குருந்து இவைகள் புஷ்பிக்கும். கிளி, குயில் வருந்தும்; வாடைவீசும்.

இவ்விராஜதானியின் தென் ஜில்லாக்களில் அனேகவிடங்களில் இம்மாதமுடிவில் உழுந்து பச்சைப்பயறு முதலிய காய்த்தானியங்கள் விதைப்பாகும். அநேக கிருஷிகர் நிலங்களை முன் கூட்டி உழுது வைக்காமல் விதைக்கச் சரியானபருவம் வாய்க்காமல் அர்ப்பசி கார்த்திகை மாதங்களில் விதைத்து நஷ்டப்படுவோர்கள். இவ்வருஷத்தில் முன் கூட்டிப்போதுமானதற்கு அதிகமாக மழைகள் பெய்திருப்பதால், புன்செய்களில் தப்பாமல் சரியான பட்டத்தில் விதைப்பு செய்யலாம். அநேக கிருஷிகர் கொள்ளு (காணம்) கார்த்திகை மாதத்தில்தான் விதைக்கவேண்டுமென்றும் முன்கூட்டி விதைத்தால் மழையில் அடிபட்டுக் கெட்டுப்போகுமென்றும் சொல்லுகிறார்கள். நீர்க்கட்டும் பள்ளமான நிலங்களில் இது உண்மையானாலும், மேட்டுநிலங்களில் முன்கூட்டி விதைப்பதில் அதிக அனுகூலமிருக்கிறது. பின்னால் விதைத்த கொள்ளுப் பயிர் பின்மழையில்லாமல் கரிந்துபோவதை எத்தனையோ முறை கண்டு பரிதபித்திருக்கிறோம். ஆகையால் கிருஷிகரே! காலத்துக்குத் தக்கதாக உங்கள் பழக்கங்களை மாற்றிக்கொள்ளுங்கள்.

சேங்கற்பட்டு ஜில்லா

இந்தமாதம் குளத்துப்பாசன நன்செய் நிலங்களில் நடுவதற்கு நெல் நாற்றுவிடவேண்டும். பொடி (புழுதி) ப்பருவம் செய்வதற்கு அனுகூலப்படாமல் அதிகமழைகள் பெய்திருப்பதால், தொளிப்பருவம் செய்யவேண்டியதாயிருக்கிறது. ஒருவேளை மழைகள் தொடர்ந்து பெய்யாமல் மோசஞ்செய்தால் என்னசெய்வது என்று யோசித்துக்கொண்டு கிருஷிகர் ஒன்றுஞ்செய்யாமல் இருக்கிறார்கள். மேட்டுநிலங்களில் புழுதிப் பருவத்தில் நெல் விதைக்கக்கூடும். அப்படிப்பட்ட நிலங்களில் புழுதிப் பருவம்செய்து நாற்றும் விடலாம். இதை உடனே கிருஷிகர் கவனிக்கவேண்டும். கிருஷியில் தாமதம்செய்தால் நிச்சயமாய் நஷ்டமுண்டாகும். சைதாப்பேட்டை மதுராந்தகம் தாலூகாக்களில் பிசினிநெல் இப்போது விதைக்கலாம்.

இந்த ஜில்லா முழுவதும் புன்செய் நிலங்களில் கேழ்வரகும், பனிவரகும் இப்போதே விதைக்கவேண்டும்.

எங்கேயாவது துவரை, மணிலாக்கொட்டை இவைகளை விதைக்கத் தாமதப்பட்டுப் போயிருந்தால் இப்போது விதைத்துவிடவேண்டும். இந்த மாதம்போனால் இந்தப் பயிர்களை விதைப்பதில் உபயோகமில்லை.

தேன்னற்காடு ஜில்லா

இந்தஜில்லா முழுவதிலும் இப்போது சம்பாநெல் தினுசுகள் விதைக்கவும் நாற்றுவிடவும் தக்ககாலம். சிதம்பரம், கூடலூர், விழுப்புரம், திண்டிவனம் தாலூகாக்களில் இந்தமாதக் கடைசியில் புன்செய்ச் சோளம் விதைக்கவேண்டும். அந்தநிலங்களை இப்போதே உழுது பாநவப்படுத்தவேண்டும். திருக்கோயிலூர், கள்ளக்குரிச்சி, விருத்தாசலம், திருவண்ணாமலைத்தாலூகாக்களில் கம்பு விதைக்கப் பருவம் செய்யவேண்டும். புன்செய்களில் கேழ்வரகும் விதைக்கலாம்.

விழுப்புரம் திண்டிவனம் தாலூகாக்களில் இறவை வரகு இப்போது சாகுபடிசெய்யலாம்.

வட ஆர்க்காடு ஜில்லா

குடியாத்தம், போலேரு, ஆரணி, வந்தவாசி, ஆர்க்காடு, வாலாஜாபேட்டை, கார்வேடிநகரம், காளாஸ்திரி முதலான இடங்களில் இளநெல்தினுசுகள் இந்தமாதம் நடுகைசெய்யவேண்டும்.

சித்தூர், குடியாத்தம் வேலூர் தாலூகாக்களில் சோளம் (இளவித்து) புன்செய் சாகுபடி செய்யலாம். இறவைக் கேழ்வரகு (வல்வித்து)ம் இப்போது சாகுபடியாகும். சந்திரகிரியில் புன்செய்க்கேழ்வரகு பயிரிடலாம்.

போளூர், ஆரணி, வந்தவாசி, ஆர்க்காடு, வாலாஜாபேட்டை தாலூகாக்களில் வல்வித்துகளான புன்செய்ச் சோளம், கேழ்வரகு, வரகு இவைகளைச் சாகுபடிசெய்ய இது சரியான பருவம். சந்திரகிரியில் சிலவிடங்களில் இப்போது அவுரி சாகுபடிசெய்வார்கள். இந்த ஜில்லாவில் எல்லாவிடங்களிலும் மணிலாக்கொட்டை விதைக்க ஏற்றகாலம் இது.

சேலம் ஜில்லா

இந்த மாதத்துடன் இந்த ஜில்லாவில் இளநெல் தினுசுகள் நடுகை முடிவாகும். புன்செய்களில் எள் விதைக்கலாம். கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஊத்தங்கரை முதலிய விடங்களில் கொள்ளு விதைக்கவும் செய்யலாம்.

சேலம், நாமக்கல் தாலுகாக்களில் புன்செய்ச் சோளம் விதைப்பாகும்.

ஆத்தூர், நாமக்கல் தாலூகாக்களில் இது இறவைக் கேழ்வரகு நடுகை செய்யவேண்டியகாலம். நாமக்கல் தாலூகாவில், சாமை விதைக்கலாம்.

கோயம்புத்தூர் ஜில்லா

கொள்ளே காலம் தாலூகா தவிர மற்ற எல்லாவிடங்களிலும் வல்வித்து நெல் தினுசுகள் இப்போது நடுகை செய்யவேண்டும். பெரிய மஞ்சள் சோளம் இப்போது புன்செய்களில் விதைப்பார்கள். சாமை விதைப்பு முடிவுபெறும். தினை விதைப்பு இம்மாதத்தில் நடக்கும்.

உடுமலைப்பேட்டை பல்லடம் தாலூகாக்களில் வரகு விதைக்கத்தக்க பருவம் இது. எள்விதைப்பு இந்தமாதத்துடன் நின்றுபோம். கொத்தமல்லி விதைக்கலாம். மிளகாய்ச்செடிநடலாம். புகையிலை நாற்றுவிட நாற்றங்கால்கள் உழுது பருவப்படுத்த வேண்டிய காலம் இது. இப்போது அதிக மழை பெய்திருப்பதால் இந்தப்பருவம் ஜாக்கிரதையுடன் செய்யவேண்டும்.

உதகமண்டலம்.—கோதுமையும், வாற்கோதுமையும், உருளைக்கிழங்கும், இந்த மாதம் பயிர்செய்யலாம்.

திருச்சினப்பள்ளி ஜில்லா

குளித்தலை, உடையார்பாளையம், பெரம்பலூர் முசிறிதாலூகாக்களில் பிசானம் நெல் தினுசுகள் நடுகைசெய்யவேண்டும்.

பெரம்பலூர் உடையார்பாளையம் தாலூகாக்களில் புன்செயிலும் நெல் விதைக்கலாம். வெள்ளைச்சோளம் விதைப்பு முடிவுபெறும்.

கம்பு, ராகி, சாமை இப்போது புன்செய்களில் விதைக்கவேண்டும். இறவையில் வரகு நடலாம். புன்செயில் வரகு விதைப்பு இந்த மாதத்துடன் முடிவாகும்.

தஞ்சாவூர் ஜில்லா

பட்டுக்கோட்டை தாலூகாவில் இந்த மாதத்துடன் இளநெல் நடுகை முடிவாகும். மற்றத் தாலூகாக்களில் சம்பாநெல் தினுசுகள் இந்தமாதத்தில்

அதி ஜாக்கிரதையுடன் நடுகை செய்யவேண்டும். பட்டுக்கோட்டை தவிர மற்ற எல்லாவிடங்களிலும் புன்செயில் கம்பும், ராகியும் விதைக்கலாம். எல்லாத் தாலூகாக்களிலும் வரகு இப்போது விதைக்கவேண்டும்.

மதுரை ஜில்லா

இராமநாதபுரம் தவிர மற்ற எல்லாத் தாலூகாக்களிலும் சின்னசம்பா பெருஞ்சம்பா நெல் இப்போது நடுகை செய்யவேண்டிய காலம்.

மதுரை திருமங்கலம் முதலியவிடங்களில் புழுதிக்கால் நெல்விதைத்து முடிவாகும். எல்லா விடங்களிலும் ராகி புன்செயில் விதைக்கலாம். இராமநாதபுரம் தவிர மற்ற எல்லாவிடங்களிலும் கம்புவிதைக்க இது தக்ககாலம். இராமநாதபுரத்தில் இப்போது குதிரை வாலியும் தினையும் விதைப்பார்கள். திருமங்கலத்தில் வரகு விதைக்கலாம். கொடைக்கானல் தாலூகாவில் கோதுமை இப்போது பயிரிடலாம். இந்தமாதக் கடைசியில் மதுரை ஜில்லாவிலுள்ள கரிசல் நிலங்களில் பருத்தி விதைக்கவேண்டும். தாமதப் படுத்தக் கூடாது.

திருநெல்வேலி ஜில்லா

இந்தமாதம் கார்நெல் அறுவடையாகும். பிசானம் நெல் சாகுபடி ஆரம்பமாகும் ஒட்டைப்பிடாரம். சாத்தூர், அம்பாசமுத்திரம் திருநெல்வேலி தாலூகாக்களில் புன்செய்ச் சோளம் விதைப்பு முடிவாகும். இவைகளிலும் ஸ்ரீவில்லிபுத்தூர், சங்கரநயினார்கோவில் தாலூகாக்களிலும் கம்பு விதைக்கவேண்டிய காலம் இதுதான். எல்லாவிடங்களிலும் இறவைக் கேழ்வரகு இப்போது நடுகையாகும். தென்காசித் தாலூகாவைத் தவிர மற்றெல்லா விடங்களிலும் சாமை இப்போதே விதைக்கலாம். ஸ்ரீவைகுந்தம் நாங்குநேரித் தாலூகாக்களில் வரகு விதைப்பு இந்த மாதத்துடன் முடித்துவிடவேண்டும். இந்த ஜில்லாக் கரிசல் நிலங்களில் பருத்தி விதைப்பு இந்த மாதக் கடைசியில் நடத்தவேண்டும். தாமதம் செய்தால் பலவிதமான இடையூறுகள் நேரிடும்.

சமாசாரக் குறிப்புகள்

NEWS AND NOTES

சென்னை கிருஷிக் கல்விச்சாலையில் முதல்முதல் வேலைசெய்துவந்த நிபுணர்களில் மெஸ்தர் இராபர்ட்சன், மெஸ்தர் ஷிப்மேயர், மெஸ்தர் பென்ஸன் முக்கியமானவர்கள் என்று அக்கல்விச்சாலையில் சம்பந்தமுள்ள எல்லாருக்கும் தெரியும். இம்மூவரில் மெஸ்தர் இராபர்ட்ஸன் 1887-ம் வருஷத்தில் பென்ஷன் பெற்றுக்கொண்டு இங்கிலாந்துக்கு போய் சில வருஷங்களுக்குப்பின் இறந்துபோனார் அவர் குமாரர் மெஸ்தர். Mr. F. W. R. இராபர்ட்ஸன் சிவில் சர்வீஸ் பரீட்சையில் தேறி இப்போது இராஜமகேந்திரத்தில் சப் கலெக்டராயிருக்கிறார். மெஸ்தர் பென்ஸன் சில வருஷங்களுக்கு முன் பென்ஷன் பெற்றுக்கொண்டு இங்கிலாந்துக்குப் போய் அங்கு வசித்துக்கொண்டிருக்கிறார். 1883-ம் ௵ இக்கல்விச் சாலையை விட்டுப்போன மெஸ்தர் ஷிப்மேயர் எங்கே போனாரென்று இதுவரையும் பொதுவாக ஒருவருக்கும் தெரியாமலிருந்தது. அவர் இங்கிருந்து போனவுடன் அநேக தேசங்களில் சஞ்சாரம்செய்து மறுபடி இந்தியாவுக்குத் திரும்பிவந்து மைசூர் இராஜ்யத்தில் பெங்களூருக்குச் சமீபமாக ஹெனூர் என்னும் இடத்தில் 200-எக்கர் நிலத்தைவாங்கி அதைப் பயிரிட்டு ஜீவனம்

செய்துகொண்டிருந்ததாக இப்போது வெளியாகிறது. அங்கே அவர் சந்நியாசிபோல் நாள்கழித்து வந்ததாகவும், தன் இனத்தாருக்குக் கடிதம் எழுதுவதே இல்லையென்றும், ஒருவருடனும் சம்பாஷிப்பதில்லையென்றும், தனிமையாய் இருந்து நாட்கழித்துவந்ததாகவும் தெரிகிறது. கொஞ்சக்காலமாக ஸ்வாஸகாசம் என்னும் வியாதியால் பீடிக்கப்பட்டு அவர் சென்ற ஆகஸ்டுமீ 23வ யன்று மரணமடைந்ததாகக் கேட்டு விசனிக்கிறோம். இவர் 11-வருஷக்காலம் விவசாயவிர்த்தி விஷயமாக உழைத்தார். அதன்பின் தேக அசௌக்யத்தால் தன் வேலையைவிட்டு நீங்கவேண்டியதாய் வந்தது. அவர் சந்யாசிபோல் காலங்கழித்துவந்த விஷயம் விநோதமாயிருக்கிறது. * * * *

பர்மாவில் மணிலாக்கொட்டை சாகுபடி யாகும் விஸ்தீரணம் கொஞ்சக்காலமாக வெகுவாய் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. 1906-07-ம் வருஷத்தில் 78, 743-எக்கரில் இப்பயிர் சாகுபடி செய்யப்பட்டது. அடுத்த வருஷத்தில் அந்த விஸ்தீரணம் 1,45, 215எக்கராச்சுது.1908-09-ல்2,48, 477 எக்கர் விஸ்தீரணத்தில் மணிலாக்கொட்டை சாகுபடி செய்யப்பட்டது. அவ்வருஷத்தின் விளைவு சுமார் 107000-டன் நிறையுள்ளதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது இந்தியாவிலும் இந்தப் பயிர் அதிக இலாபம் கொடுப்பதாகையால் இது அதிகமாய்ப் பரவும் என்பதில் தடையில்லை. * *

சில நாட்களுக்குமுன் லக்னோவில் கால்நடைகளின் அபிவிர்த்தியைப் பற்றி ஆலோசிப்பதற்காக ஒருசபை கூடினார்கள். அப்போது (1)கிராமங்களில் கால்நடைகளின் மேய்ச்சலுக்கு அதிகமான 'மேய்கால்' நிலங்களை விட்டுவைக்கவேண்டுமென்றும், (2) கிராமந்தோறும் இந்த மேய்கால் நிலங்களை காவல் காடுகளாக்க வேண்டுமென்றும், (3) தோப்புகளுண்டாக்கும் விஷயத்தில் ஜனங்களுக்கு முன்னிலும் அதிகமான ஊக்கம் உண்டாக்கவேண்டும் என்றும், (4) கால்நடைகளை ரெயில்மார்க்கமாய்க் கொண்டுபோவதற்கு தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் தாரணை அதிகம் என்றும் அதைக் குறைக்க வேண்டுமென்றும்,(5) கால்நடை வியாதிகள் பரவாமலிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள்செய்ய வேண்டுமென்றும், (6) பால், வெண்ணெய், நெய் முதலிய வஸ்துக்களில் தண்ணீர், குசும்பா எண்ணெய் முதலிய பொருட்களைக் கலப்பதைத் தடுப்பதற்காகச் சட்டம் உண்டாக்கவேண்டுமென்றும், (7) சுத்தமான பால் முதலான வஸ்துக்களை விற்கவேண்டியதற்காக கவர்ன்மென்டாரும் முனிசிபாலிட்டியாரும் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், விவசாயவிர்த்தி சம்மந்தமாகவும் கால்நடை அபிவிர்த்திக்காகவும் விவசாய சங்கங்கள் ஒன்றுசேர்ந்து தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் தீர்மானித்து, அந்தத் தீர்மானங்களை கவர்ன்மெண்டாருக்கு அனுப்பியிருக்கிறார்கள். "மேய்கால்" நிலங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் விசேஷமாக இருக்கவேண்டியது அத்தியாவசியம். * * *

நாளது செப்டம்பர்மீ 4-தேதி மாலையில்உதகமண்டலத்தில் வேட்டையாடச்சென்றிருந்த சிலர் குதிரைசவாரி செய்துகொண்டு போகும்போது கனந்தங்கிய சென்னை கவர்னர் துரை அவர்களின் குமாரரான மெஸ்தர் R. E. லாலி துரையின் குதிரை ஒரு கால்வாய்ப் பள்ளத்தைத் தாண்டும்போது கால் இடறிக் கீழே விழுந்ததில் துரையின் கழுத்து முறிந்து உடனே இறந்து போனதாகக்கேட்டு அதிகவிசனப்படுகிறோம். கனம்பொருந்திய கவர்னர் துரை யவர்களுக்கு இறந்துபோனவரைத் தவிர வேறு ஆண் பிள்ளைகளில்லையாம்,

இரும்புக்கலப்பையின் உபயோகம்
THE USES OF IMPROVED PLOUGHS

1. நாட்டுக்க லப்பைகளை நன்மரத்தில் செய்வார்
காட்டுக் கலப்பைசற்று கனமாகச் செய்வார்.
2. கொழுநீண்ட இரும்பாணி கோணல்மரங் குற்றி
பழுதிலதில் பொருத்துமரம் மேழியது பற்றி.
3. ஏர்திருத்தி உழவுசெய்யும் எல்லாரும் பாரும்
சீர்திருத்தி இரும்பில்செய்த சிறகலப்பைச் சீரும்.
4. மேழிக லப்பைகுத்தி மிகவும்லே சிரும்பே
தாழுமிதன் கொழுவகலந் தனித்தகடாம் விரும்பே.
5. சாருமிதன் அருகிலொரு மேல்வளைந்த தகடு
பேரும்மண்ணைத் தாங்கியதன் பின்புரட்டல் அழகு.
6. அண்ணா இக்கலப்பைமிக அழகுளது பாராய்
மண்ணைஒரு புறமாக மாற்றியிடும் சீராய்.
7. தம்பிஇதில் களைப்பூண்டும் தாளும்புல் அறுகும்
வெம்பிமண்ணில் புதைந்தவைகள் வேர்சிதைந்து மறுகும்.
8. திருந்துமிந்தக் கலப்பைசெயும் திரமாமீ ருழவு
பொருந்துமந்த மரக்கலப்பை போக்கியஆ றுழவே.
9. அதுவிரண்டு மூன்றங்குல ஆழம்மண்ணைக் கிளறும்
இதிலைந்தா றங்குலமாம் இடத்தில்மண் புறளும்.
10. அதன் படைச்சால் மேல்விரிந்தும் அடிசிறுத்து மிருக்கும்
இதன்படைச்சால் இருபுறமு மேவிரிவாய்ப் பெருக்கும்.
11. நெருங்கஉழு தாலுமிதில் நேரும்இடை கட்டை
சுருங்கஉழு தாலுமிதில் சொற்பமுமில் வெட்டை.
12. இதனுழ ஒருநாளையில் ஏக்கர்அரை மட்டாம்
அதினுழும் ஏக்கரை அதிற்பாதியுந் திட்டாம்.
13. மேலுமிதன் அனுகூலம் மெய்யாகக் கேளும்
சாலும்பயி ருணவுமண்ணில் சமைந்துவரும் நாளும்.
14. களைப்பூண்டும் புல்லறுகும் காய்ந்துமடிந் தெருவாம்
விளைபயிர்வேர் ஆழ்ந்திறங்கி மிகச்செழித்த திருவாம்.
15. நீர்நிறையக் கொள்ளுமது நின்றீரங் காக்கும்
கூர்வெயிலில் பயிர்காய்ந்தும் கோதியாமல் பார்க்கும்.
16. போட்டஎரு மண்சேர்த்து பொங்குமுவர் கழித்து
வாட்டமின்றிப் பயிர்வகைகள் வளர்க்குமிகச் செழித்து.
17. தருணம்து தவறாமல் தார்நிலங்கள் உழவாம்
பருவமது குறையாமல் பார்நிலங்கள் விதைப்பாம்.
18. இரண்டுஜதை எருதிருப தேக்கர்பயி ராக்கும்
திரண்டணையும் இக்கலப்பை தீபயிரைக் காக்கும்.
19. ஜதையாமொரு தோரைம்பது ரூபாயினில் சிறக்கும்
அதுசெய்யும் வேலைத்திறம் ஆச்சரியம் பிறக்கும்.
20. பாளையங்கோட் டையில்வாழும் பள்ளியிற் பிள்ளைகளெவ்
வேளையிலுங் கைபிடித்து விரும்பிஉழு வாரே.
21 அவசியமா னல்வாங்க ஆறுரூபாய் ஆகும்
விவசாய சங்கத்தில் விவரம்வெளி யாகும்.

J. DHARMARANGA RAJU.

P. SUBBA ROY'S
Wonderful Auyurvedic Medicines.

பி. சுப்பறுய், பரங்கிப்பேட்டை,
தென்னுற்காடு ஜில்லா.

தயவுசெய்து

இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்

பி, சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

28. "பிரஹத் சந்திரோதய மகரத்வஜம்":— தாதுநஷ்டம், பலஹீனம், புருஷத்தன்மையில்லாமை, இந்திரியநஷ்டம், சொப்பன ஸ்கலிதம், புத்திபிரமை, மறதி, விந்துக்ஷீணம், சீக்கிர ஸ்கலிதம் முதலிய பற்பல ரோகங்களை வேருடன்கொன்று அபரிமிதமான புருஷத்தன்மையைத்தரும் சந்தேகமில்லை. இம்மருந்து சாப்பிடத் தொடங்கினநாள்முதல் நாளுக்கு நாள் இதன் சிறந்தகுணத்தைக் காட்டும். பாலியத்தில் சிற்றின்பத்தில் நுழைந்து புருஷத்தன்மையை சீக்கிரத்திலிழந்து பரிதவிப்போர்கள் இம்மருந்து சாப்பிட்டுவந்தால் வெகுசீக்கிரம் பூரண புருஷத்தன்மையை திரும்பப்பெற்று சுகிக்கலாம் என்பது நிச்சயம். எழுநாளைய ஔஷதம் ரூபாய் 3, வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

29. "சவன பிராசனம்":—இம்மருந்தினுல் ஈளை, இருமல், சுவாசகாசம், க்ஷயம், தொண்டைரணம், கபம் இன்னும் நுரைஈரலைப்பற்றிய எல்லாவித வியாதிகளும் வெகுசீக்கிரத்தில் தடையின்றி தீரும். இம்மருந்து பலஹீனத்தைப் போக்கி தேகத்திற்கு வலுவைய்யும், தேஜஸையும் காந்தியையும் தரும். சவனமஹாரிஷியவர்களுக்கு இம்மருந்து தேவர்களால் செய்து கொடுக்கப்பட்டு ருஷி பாலியதிசை யடைந்ததாக ஆயுர்வேதசாஸ்திரத்தில் கொண்டாடப்பட்ட சவனபிருசனம் என்னும் சிறந்த ஔஷதம். டப்பா 1-க்கு ரூபா 2, வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

30. "மறாத்துதஜம்":—இம்மருந்திற்கு ஒப்பான ஔஷதம் ஆயுர்வேதத்தைத் தவிர வேறெந்தவகை மருந்து சாஸ்திரத்திலேயும் கிடையாது. இம்மருந்தினுல் தீராத வியாதியாவது குணமடையாத வியாதியாவது கிடையாது. அநேக வியாதிகளுக்கு இது கைகண்ட ஔஷதம். எககாரணத்தினுலுண்டாகும் தாதுநஷ்டம், பலஹீனம், மதுமூத்திரம், அதிமூத்திரம், மூத்திர அடைப்பு, பிரமேகம் முதலிய இன்னும் அநேக மூத்திரநோய்களும் எல்லாவித சுரங்களையும், ஜலுப்பு, இருமல், க்ஷயம், காசம், அஜீரணம், நீர்க்கோர்வை, பாண்டு, சோகை, காமாலை, மயக்கம், சித்தப்பிரமை, காலரு, பிளேக், ஆண் குறி துவளல், ஸ்திரீகளுக்கு கர்ப்பமாயிருக்கும்பொழுதும் பிரசவித்தபின்பும் காணும் சகலநோய்களையும், நரம்புகளின் பலஹீனம் முதலிய இன்னும் அநேகவித வியாதிகளையும் குணமாக்கும். மூளையைப் பலப்படுத்தும். இம்மருந்து தங்தம் முதலியதுகள் சேர்த்து செய்யப்பட்டிருக்கின்றது. விலை தோலா 1-க்கு ரூபா 24. எழுநாளைய ஔஷதம் ரூபா ஒன்று. வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

31. "வசந்த குசிமாகரம்":—சர்க்கரையோடு கூடியதும் அதாவது மதுமேகம், சர்க்கரையில்லாததுமாகிய நீரிழிவு, பிரமேகம், மூத்திர கிருச்சிரம், தாதுநஷ்டம், பலஹீனம், உடல் வெளுப்பு, இந்திரிய நஷ்டம் அதிதாகம், இருமல், நாக்கு வரண்டுபோகுதல், களைப்பு, மயக்கம், அசதி, கை

கால்கள் எரிச்சல் முதலிய அநேக வியாதிகள் சீக்கிரம் அடியோடு குணமாகும். மிகவும் விலையுயர்ந்த ஔஷதம். இது செய்வதில் முத்து, தங்கம், கஸ்தூரி முதலிய இன்னும் விலைபெற்ற சாமான்கள் சேருகின்றன. எழுநாளைய ஔஷதம் விலை ரூபா 5, வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

32. "இரத்தசுத்தி":—தேகத்தில் இரத்தம் கெட்டுப் போகுதலால் உண்டாகும் வாய்ப்புண், கண்ணோய், புண்புரைகள், மேஹரணங்கள், மேக தடிப்பு, அரிப்பு, படை, குஷ்டம் முதலிய கருமவியாதிகள், பலஹீனம், அசதி, வாதப்பிடிப்பு, தலைவலி, அக்கினிமாந்தம், அரோசிகம், வாய் கசப்பு, தேகத்தில் நாற்றம், மகோதரம், தோல் நிறம் மாறுதல், தோலில் சொறணை யற்றுப்போகுதல், புத்திமந்தம் முதலிய பற்பல வியாதிகள் குணமாகும். ரத்தத்திலுள்ள நஞ்சைப்போக்கி, சுத்தப்படுத்தி, தேகவலிவு, தேஜஸ், நல்லபசி தாதுபுஷ்டியுண்டாக்கும். 20-நாளைக்குப் போதுமான மருந்து டப்பா 1-க்கு ரூபாய் 2, வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

33. "சித்தமகரத்துவஜம்":—இது மகரத்துவஜத்தைவிட சிறந்த ஔஷதம். இதனால் தீராதவியாதி ஒன்றுமில்லை. சர்வசுரங்கள், காசம், இருமல், க்ஷயம், அக்கினிமாந்தம், காலரா, சீதபேதி, ரத்தபேதி, ஸகல வாயுவு, இன்னும் எல்லா வியாதிகளும் தீரும். இம்மருந்து உபயோகித்தவருக்கு ஆயுசு 100-வருஷமானாலும் பூரண புருஷத்தன்மை குறையாமலிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தோலா 1-க்கு ரூபா 80. ஒரு வாரத்திற்குள்ள மருந்து ரூபா 3, வி. பி. செலவு பிரத்தியேகம்.

34. "வாயுஸம்ஹாரி":—கை, கால், கணுக்களில் பிடிப்பு, வீக்கம், கடுப்பு, கால்முடக்கு, தேகத்தில் உளைச்சல், குற்றல், குடைதல், தலைநோய், பக்கசூலை, பார்சவாயுவு, திமிர்வாயுவு, அஜீர்ணம், குன்மம், அண்டவாயுவு, சூலைவாதம், மலசலக்கட்டு முதலிய அநேகவிதவாயுவுப் ரோகங்களும் தீரும். டப்பா 1-க்கு விலை ரூபாய் 1, வி.பி. செலவு 1-முதல் 3 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

35. "காலரா என்னும் வாந்திபேதிக்கு மருந்து":—இக்கொடிய நோய்க்கு இது கைகண்ட ஔஷதம். டப்பா 1-க்கு ரூபா. 1. வி. பி. செலவு 1 முதல் 3 டப்பாக்கள்வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

36. "மலபந்த நிவாரணி":—மலஜலக்கட்டு, அக்கினிமாந்தம், வாயுவு, குடல்புரட்டல், மூலச்சூடு, காந்தல், இலைப்பு, மூலம் செரியாமை, புளித்தயேப்பம் தீரும். தினம் தப்பாமல் காலாகாலங்களில் மலம் உதயமாகும். டப்பா 1-க்கு விலை அணா 10, வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

37. "சந்திராமிருதரஸ்":—அசாத்தியமானகாசம், இருமல், க்ஷயம் முதலிய நுரையீரலைப்பற்றிய வியாதிகளைக் குணப்படுத்தும். நல்ல பசியும், தேகபலமும் உண்டாக்கும், டப்பா 1-க்கு ரூபா 1, வி. பி. செலவு 1 முதல் 3 டப்பாக்கள்வரையில் அணா 5 பிரத்தியேகம்.

38. "சீதபேதி ரத்தபேதிக்கு மருந்து":—எத்தனைநாள்பட்டதானாலும் இம்மருந்தினால் வயிற்றுகழிச்சல், சீதபேதி, ரத்தபேதி, கிராணி, வயிறு கடுப்பு முதலியவைகள் அடியோடு தீரும். டப்பா 1-க்கு விலை ரூபா. 1, வி. பி. செலவு 1 முதல் 3 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராய், பறங்கிப்பேட்டை,
தென்னாற்காடு ஜில்லா.

"Rajambal"

கேட்ட உடன்சந்தோஷத்தையும்,

பார்த்த உடன் ஆநந்தத்தையும்,

வாசித்த உடன் மனோ உற்சாகத்தையும்

முடித்த உடன் வியப்பையும்,

கொடுக்கும் நாவல் எது?

"இராஜாம்பாள்"

என்னும் துப்பு அறியும் நாவல் ஒன்றுதான்.

கண்டோர் மனதைக்கவரும் மூன்று சித்திரபடங்களுடன் கூடியது.

விலை அணா 12.

தபால் கூலி வி. பி. கமிஷன் அணா **2.** பிரத்தியேகம்

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ்,

5, மௌண்ட்ரோட், சென்னை

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

இரங்கோன்

இரஞ்சித போதினி

எப்பொழுதும் சித்திரப்படங்களோடு பிரகாசிப்பதுடன் அறிவைப் பரவச்செய்து ஆனந்தத்தை விளைவித்து யாவர்க்கும் சுகசெல்வ நன்மைகளையும், சுகிர்தபாக்கிய பொக்கிஷத்தையும், நீடூழி பெருதவிக்கும் ஓர் நவீன மாதாந்த பத்திரிகை. இதிலடங்கிய விஷயங்களாவன:—

சுதேச சுகாதார சங்கத்தின் மெம்பர்கள் எழுதும் வியாசங்கள், மனோவசிய சாஸ்திரம், சுகாதாரவிளக்கம், அமெரிக்க சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தினர் கண்டுபிடித்த நூதன விஷயங்கள், வைத்தியக்குறிப்பு, பாலர் பரிபாலனம், ஸ்திரீகளுக்குரிய விஷயங்கள், விநோத விசித்திர விஷயவிளக்கம், அதிரசமஞ்சரி, ஹிதோபதேசம், பழமொழி, விடுகதை விஞக்கள், உள் நாட்டு வெளிநாட்டு வர்த்தமானங்கள், ஜீவாதார மந்திரோபதேசம் முதலிய அரிய பெரிய பல விஷயங்கள்.

இதன் வருஷசந்தா ரூபா 2 தேவையானவர்களுக்கு மாதிரிப்பிரதி அனுப்பப்படும்.

மானிட மர்மசாஸ்திரம்

ரூபாய் 300 இனம்

விவரம் பின் குறிப்பிட்டிருக்கும் ஒவ்வொரு புஸ்தகத்திலும் கண்டுகொள்ளலாம்.

		அணா
1.	மானிட ஜீவியத்தின் பலபருவங்கள் (ஓர் உபந்நியாசம்) 23 படங்களுடன் … … … …	6
2.	இல்லற இன்ப இரகசியம் (29 படங்கள்) … …	12
3.	ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும் (46படங்கள்)	12
4.	மாதாவின் மாகூிமை (18 படங்கள்) … …	6
5.	சிசுவுற்பத்தி (34 படங்கள்) … … …	6
6.	கர்ப்பக்கால சுகாதாரவிதிகள் (8 படங்கள்) … …	4
7.	கர்ப்பக்கால நோய்களும் பரிகாரங்களும் … …	6
8.	மருத்துவசாஸ்திரம் (8 படங்கள்) … ..	8
9.	சிசு பரிபாலனம் (15 படங்கள்) … … …	4
10.	ஆண், பெண் மலட்டிற்கு நிவாரணம் (5 படங்கள்) …	8
11.	ஆண்மையின் அழிவும் அதன்மீட்சியும் வாலிபருக்கு (6 படங்கள்)	8
12.	சமயோசித சஞ்சீவி … … … …	2

தபாற் செலவு ஒரு அணா

மேற்குறித்த புஸ்தகங்களுக்கு ஒரே தடவையில் ஆர்டர் அனுப்புகிறவர்களுக்கு தபாற்செலவு உள்பட ரூபா 5-க்கு அனுப்பப்படும்.

12 புஸ்தகங்களையும் ஒன்ருகச்சேர்த்து உயர்ந்த காலிகோ பயிண்டு செய்து தங்க எழுத்துக்கள் பதித்த பிரதி ஒன்றுக்கு தபாற் செலவு உட்பட ரூபா 5-8-0.

மானேஜர்,

"இரஞ்சித போதினி ஆபீஸ்"

11, 12 கமிஷனர் ரோட்,

இரங்கோன்.

New Books for Sale.

மில்டேரி இந்து பாகசாஸ்திரம்.

மானிடஜென்மமெடுத்த நாம் எவ்வளவோ பிரயாசமும் தேககஷ்டமு மெடுத்து சம்பாதிப்பது சாண்வயிற்றுக்காகவே. அவ்வயிற்றை நிரப்புவதை மனதிற்குத் திருப்தியாகும்படி புசித்துவந்தால் ஜீவநாள்வரையில் அழியாத தேகவல்லமை பெற்றிருக்கக்கூடும். அவ்வுணவுகளில் "மாம்ஸம் மாம்ஸத்தை விருத்திசெய்யும்" என்கிறபடி இப்பிரபஞ்சத்தில்பெரும்பாலார் மாம்ஸபக்ஷணிகளாயிருக்கின்றனர். அவர்கள் மாம்ஸத்தை நன்றாய் சமையல் செய்துபுசிக்கும் பக்குவத்தைத்தெரிந்துகொள்ளும்பொருட்டு அக்பர் பாட்சா, சிவாஜி, ஸரபோஜி மஹாராஜாக்களும் இன்னும் அநேக பிரபுக்களும் ஆவலோடு உருசியுடன் புசித்த அநேகமுறைகளும், மஹம்மதியர்களது சிலஅருமையான பாகங்களும், மாம்ஸபட்சணம் செய்யாதவர்கட்கு உபயோகமாகும்படி அரிசி, பருப்பு, ஜலம் இவற்றின் சுத்திகளும், மல்லிகைப்பூவாசனை அன்னம், வெங்காயத்தாளித அன்னம், மல்கோபாப் பழப்புலவு, பகாராபுலவு முதலிய சைவமுறைகளும், துவையல், ஊறுகாய் வகைகளும், பலகார வகைகளும், பாயஸம், சரபத்துவகைகளும் வசனநடையி லச்சிட்டுளது. சற்று வாசிக்கத்தெரிந்த பெண்டுகள் முதல் ஒருவரைக்கேட்காமலே பாகங்களைச் செய்யலாம்.

விலை அணு 8, வி. பி. சார்ஜ் அணு 3.

விநோதவேடிக்கைக் கதாமஞ்சரி

எல்லாம் சிரிப்பு! எல்லாம் வேடிக்கை, வாங்கி வாசியுங்கள்.

இதை வாசிப்பவர்களும் கேட்பவர்களும் வயிறெல்லாம் புண்ணாகும்படி கீழே விழுந்துவிழுந்து சிரிப்பார்கள். படிக்கப்படிக்க மிக வேடிக்கையாயிருக்கும். இப்புத்தகத்தை வாங்கி வாசிப்பவர்கட்கே இதன் உண்மைவிளங்கும். விலை அணு 6, வி. பி. சார்ஜ் அணு 3.

ஜெயங்கொண்ட சௌந்தரவல்லிக்கதை.

ஆண் பெண்முதலிய சகலரும் மிகவேடிக்கையாக வாசிக்கும்படி செவ்விய தமிழ்நடையில் எழுதப்பட்ட ஓர் அருமையான கதை.

கதைபடிக்க அவாக்கொள்வோர் இதைப்படிக்குந்தோறும் சந்தோஷக்கடலில் மூழ்கி ஆனந்தங்கொள்வாராயினும் முடிவில் தெளிந்த ஞானத்தையும் பெறுவார்களென்பது திண்ணம். கதையின் மூலமாகவே பல அருமையான நீதிவிஷயங்களை அற்புதமாயெடுத்துக் காட்டியுள்ளது.

விலை ரூபா 1, வி. பி. சார்ஜ் அணு 4.

ஆசாரத்திரட்டு.—இது ஓர் அருமையான இந்துசாஸ்திரம், இந்துக்களாகிய நாம் பிரதிதினம் நடந்துகொள்ளவேண்டிய விதிகள் நேமநிஷ்டைகள், அனுஷ்டானங்கள் முதலிய சுமார் 200-விதிகட்குமேல் வசனநடையி லச்சிட்டுள்ளது. விலை அணு 4, வி. பி. அணு 3.

சுகந்த ஸ்நாநட்பொடி

இந்த வாசனையுள்ள பொடியை பிரதிதினம் குளிக்கும்போது உடம்பிற்குத் தேய்த்துக் குளித்துவந்தால் வியர்வைநாற்றம், கற்றாழைநாற்றம், அழுக்குத்தேமல், உடம்பில் நமை, சொரி, சிரங்கு, கைகால் எரிச்சல், மேகக[illegible] கை, மேகவூரல், கிரந்திமுதலிய இன்னும் அநேகவித தோலைப்பற்றிய [illegible] திகள் நிவர்த்தியாவதன்றி தேகத்தில் சுகந்தவாசனை கமகமவென்று[illegible] கொண்டே ஆரோக்யமாயிருக்கும்.

டப்பி 1-க்கு அணு 4. 6-டப்பி ரூபா 1-4. 10-டப்பி ரூபா 2.

மேற்கண்டுள்ள புத்தகங்களைக் கீழ்க்கண்டவருக் கெழுதி வி. [illegible] மாகவாவது நேராகவாவது பெற்றுக்கொள்ளலாம். தங்கள் முழுவிலா[illegible] யும் தெளிவாயெழுதி இந்தபேப்பரின் பெயரையும் கண்டெழுதவும்.

க. பெ. நாராயணசாமி முதலியார், கமலநாயகி விலாச[illegible]

நெ. 27, வைக்கோற்காரன் தெரு, வேப்பேரி போஸ்ட், செ[illegible]

வி. ராமச்சந்திரன் பிரதர்ஸ்,

புஸ்தக வியாபாரி,

32, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்

இனிய தமிழ் நாவல்கள்

	ரூ.	அ.
கமலனி கலஹம்ஸம் ...	0	8
இராஜாம்பாள்	0	12
சந்திரகாந்தா	0	12
பிரேமகலாவதீயம்	0	12
சுந்தரி மனோஹரன் ...	0	12
ஹனுமான் சிங்	0	12
காமாட்சி	0	8
புருஷோத்தமன்	0	10
சாரதாம்பாள்	0	8
சந்திரசேகரன்	0	8
துர்கேசநந்தினி	1	0
ஜடாவல்லவர் 1 பாகம் ...	0	8
ஷை 2 ,, ...	0	10
ஞானம்பாள்	0	6
வசீகரி	1	0
மங்களாம்பாள்	0	8
விஜயலெட்சுமி	0	10
`பாஜசரித்திரம்	1	8
ரமணியர் தோத்திரம்...	0	3
லா	0	8
... ...	1	0
ாபன்	0	5
ரந்தர் துப்பரியும் கதை	0	8

	ரூ.	அ.
ம-ா-ா-ஸ்ரீ, ப. சம்பந்தமுதலியார், B.A., B.L. இயற்றிய		
லீலாவதி சுலோசனை ...	0	12
கள்வர் தலைவன்	0	8
மனோஹரன்	0	12
யயாதி	0	8
அமாலாதித்யன்	1	0
சாரங்கதரன்	0	8
வேதாள உலகம்	0	8
இரண்டு நண்பர்கள் ...	0	12
சத்ருஜித்	0	12
காதலர் கண்கள்	0	12
பண்டித நடேசசாஸ்திரி போட்ட		
தீனதயாளு	0	8
மதிகெட்ட மனைவி ...	1	0
கோமளம் குமரியானது ...	0	12
ஸ்ரீமாமிசொலு	0	8
தலையணை மந்திர உபதேசம்	0	8
திக்கற்ற இரு குழந்தைகள்	1	4
பண்டிதை விசாலாக்ஷியம்மாள் போட்ட		
லலிதாங்கி	0	8
சுஜாதா	0	8
வனசுதா	0	8

ஜாம் நகரத்திலுள்ள ஜாம் சாஹிபினல் அங்கீகரி

200-வருஷ காலமாய்ப் பிரசித்தியுடன் நடை

வீரிய விருத்திக்கும்

இழந்த பலந்தைத் திரும்ப அடைவதற்கும் இரண்

ரத்னவுஷதங்கள்

மதன் மஞ்சரி மாத்திரை

சரீரத்தில் இருக்கப்பட்ட நரம்புகளை பலஹீனமாக கெட்

யால் கெடுத்துக்கொள்ளுகிறேம்

மதன்மஞ்சரி:—நரம்புகளுக்கு வலிவு உண்டாக்கத்தக்கது

,, வயசு சென்றவர்களுக்கு பால்யதனத்தை
செய்யும்.

,, மனுஷர்களை எக்காலமும் பால்யமாகச் செய்

,, மனுஷனுடைய இந்திரியத்திற்கு வலுவுகொ

,, இதைச் சாப்பிடுகிறவர்களுக்கு பிரயோஜன
காது.

,, நரம்புகளுக்கும் வலுவு உண்டாகும்.

,, இதைத் தவிர மேன்மையான டானிக் கிடை

,, இதைச் சாப்பிடுகிறவர்கள் எல்லா சுகமும்

இவ்வியாதிகளெல்லாம் நிவர்த்தி செய்கிறதற்காக நம்மு
க்கு சுகம்கொடுப்பது மதன்மஞ்சரி தவிர வேறே ஒன்று
கண்ட மருந்து சாப்பிட்டால் 4-தினங்களுக்குள்ளாக அதனு
தெரியவரும். இந்த மருந்தை 20-நாள் விடாமல் சாப்பிட்டா
டைய சரீரத்தைப் பற்றி வேறே சிரத்தை எடுத்துக் கொள்
தில்லை.

மதன்மஞ்சரி மாத்திரைகளைச் சாப்பிட்டுவருகிறவர்களு
சவுக்கியத்தையும் பலத்தையும் அவர்களால் சொல்லத்தரமல்ல.

40 மாத்திரைகள் அடங்கிய ஒருடப்பிக்கு விலை ரூபா 1. வி

நபும்ஸகத்வாரி கிரத்

நரம்பை விருத்திசெய்து பலப்படுத்துவதற்கான ஓர் ஆயின்
மேற்பூசுதற்கு உதவுவது. நரம்புகளைத் தளரவிடாமற் பாதுகாப்
வயதுக் கோளாறுகளினல் சரீரபலம் இழந்துபோனதை இந்தமரு
பக்கொடுத்து மிக்க மேன்மையோடிருக்கச்செய்வது.

2 தோலா கொண்ட டப்பியின் விலை ரூ 1-0-0

ப்ரோப்ரைடர்,
ஆயுர்வேதோய அவுஷதா
ராஜ

நாராயணஜீ, கே

மதராஸ் பிராஞ்சு;
No. 1-74, சைனபஜார் ரோட்
ஸௌகார்பேட்

o More Cholera.

ன்து தங்கப்பதக்கங்களும், முதல்தரமான அநேக

தா பத்திரங்களும் வெகுமான மளிக்கப்பட்டன

ல்ரு (வாந்திபேதி) இனி இல்லை !

மரணங்களுமில்லை !

வதமார்த்தாண்ட, பிஷங்மணி,

டி. கோபாலாசார்யர் எ.வி.எஸ்.

ல் சாஸ்திர முறைப்படி நேரில் தயார்செய்யப்பட்ட:—

ந்யரிஷ்டமும், விஷ-ஊசிஸஞ்சீவினி மாத்திரைகளும்

காலரா என்னும் வியாதியைத்தடையின்றி நிர்மூலமாக்கும், ள் பல்லாயிரம் மனிதரை மரணத்தினின்றும் காப்பாற்றின. ரின் முக்கியமான மகிமை யென்னவெனில் :—

ஷணத்தில் வாந்திபேதியை நிறுத்தி அதனாலுண்டாகும் துர்க் யெல்லாம் போக்கும்.

ன்னியைக்கொஞ்சமும் தலையெடுக்கவொட்டாது.

ரத்தில் உஷ்ணத்தைக் காப்பாற்றி தேகத்திற்கு சீதளத்தை வர ற்செய்யும்.

மூத்திரத்தைத் தடையின்றி வரச்செய்யும்.

வியாதி எந்த ஸ்திதியிலிருந்தபோதிலும் குணத்தைக் கொடுக்கா து.

ளுடைய மித்திரர்களையும், பந்துக்களையும் பிராணாபாயத்திலிரு ாற்றுவதற்கு முதலில் ஒரு புட்டியாவது இதை சங்க்ரஹித்து உங் ல் வைத்துக்கொள்ளவேண்டும்.

விஷயத்தில் எங்களுக்கு அனேகமாயிரம் யோக்கியதாபத்திரங்க ந்திருக்கின்றன

கற்பூராத்யரிஷ்டம் விஷ-ஊசிஸஞ்சீவினி	} விலை அணா 12.

ாஸ்டேஜ் பாகிங் முதலிய செலவு பிரத்தியேகம்.

ஆயுர்வேதாச்சிரமம்,

44, ஆசாரப்பன் தெரு,

ஜார்ஜ் டவுன், சென்னை

டெலிக்ராம் அட்ரஸ்

"பண்டிட்" மட்றஸ்.

. B:—இன்னும் இதரபேடெண்டு சாஸ்த்ரீக மருந்துகளும் அவைக ட்லாக்குகளும் கடிதமெழுதுவோர்க்கு இனாமாயனுப்பப்படும்.